LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – III
– 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

**EDUS 4102 ஒப்பியற்கல்வி (Comparative Education)**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) ஒப்பியற் கல்வியைத் தீர்மானிப்பதில் செல்வாக்குப் பெறும் பல்வேறு காரணிகளை விளக்குக?
(09 புள்ளிகள்)

(ஆ) நாடுகளிடையே கல்வி முறைமைகளை ஒப்பிட்டு நோக்குவதால் ஏற்படும் பயன்கள் பற்றி ஆராய்க?
(10 புள்ளிகள்)

(இ) ஒப்பியற் கல்வி அணுகுமுறைகள் மூன்றைச் சுருக்கமாக ஆராய்க?
(06 புள்ளிகள்)

02.(அ) 1800க்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களையும் அதன் முக்கிய பணிகளையும் குறிப்பிட்டு விளக்குக?
(15 புள்ளிகள்)

(ஆ) பிரித்தானியக் கல்வி முறையைத் தொடர்ந்து இலங்கை பின்பற்றியதால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்க?
(10 புள்ளிகள்)

03.(அ) இலங்கையின் முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி என்பவற்றை மேம்படுத்த சீனா, யப்பான் கல்வி முறைகளின் அனுபவங்களை எந்தளவுக்குப் பின்பற்றலாம் என எடுத்துக் காட்டுக?
(09 புள்ளிகள்)

(ஆ) "பாடசாலைகள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படாமையே கல்வித் தரம் வீழ்ச்சியடைவதற்கான காரணமாகும்." சில அபிவிருத்தியடைந்த நாடுகளை உதாரணங்காட்டி இக்கூற்றைப் பரிசீலனை செய்க?
(09 புள்ளிகள்)

(இ) மேலைத்தேய நாடுகளில் எதிர்காலத் தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல்கள் எவ்வாறு பாடசாலைக் கல்வி முறையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுக?
(07 புள்ளிகள்)

04.(அ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உயர் கல்வி அமைப்பில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெறுவதற்கு அந்நாடுகளின் அரசாங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சுருக்கமாக ஆராய்க?

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் தற்போது தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இலங்கையின் கல்வி முறையில் ஏற்படும் சாதக, பாதக விளைவுகளை இந்தியாவின் படிப்பினைகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க?

(13 புள்ளிகள்)

05.(அ) போர்த்துக்கேயரை விட டச்சுக்காரரின் கல்விக் கட்டமைப்பு இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு அதிக பங்காற்றியது என்பதற்கான ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) மத்திய பாடசாலை ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கல்வி தொடர்பான சிபார்சுகளைப் பட்டியற்படுத்திச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) சமயக் கல்வி மறுமலர்ச்சியால் இலங்கையின் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

06.(அ) அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் கல்விப் பிரச்சினைகளைப் போக்க வளர்ச்சியடைந்த நாடுகளால் ஆற்றப்படக்கூடிய பணிகள் பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் ஆசிரியர் கல்வி தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டி அதனை மேம்படுத்த எத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளிலிருந்து உதாரணங்களைக் காட்டி விளக்குக?

(13 புள்ளிகள்)

********